வினாத்தொகுப்பு எண் :
2 0 6 8 5 4 3 2 1

CCS2T/2022

பதிவு எண்

2022

பொதுத் தமிழ் (பத்தாம் வகுப்பு தரம்) மற்றும் பொது அறிவு (பட்டப்படிப்பு தரம்)

இந்த வினாப்புத்தகம்

பகுதி - அ (பொதுத் தமிழ்) மற்றும் பகுதி - ஆ -வினை (பொது அறிவு) உள்ளடக்கியது

கால அளவு : மூன்று மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 300

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். **வினாத் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.**
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
5. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும். விடைகளைக் குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
6. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் **கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால்** குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்கத் தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தெரிவு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். **உங்களுக்கு விடை தெரியவில்லை எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும்.** எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
8. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
9. குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத்தொகுப்பின் கடைசிப்பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். **இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.**
10. வினா வரிசை எண்கள். 101 முதல் 200 வரை (பகுதி-ஆ) ஆங்கில வடிவே இறுதியானது.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்றத் தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

ENGLISH VERSION OF THE ABOVE INSTRUCTIONS ARE PROVIDED ON THE BACKSIDE OF THIS BOOKLET

SEAL

1. தேன் தோன்றியது போல மக்கள் நாவில் செந்தமிழே! நீ தோன்றி வளர்ந்தாய்! வாழி! - எனக் கூறியவர்

A) பெருஞ்சித்திரனார்

B) பாரதிதாசன்

C) வாணிதாசன்

D) பாரதியார்

2. பொருத்துக.

(a) ச - 1) ஆறு

(b) சு - 2) ஒன்பது

(c) க - 3) நான்கு

(d) கூ - 4) ஒன்று

A) 3 4 1 2

B) 2 1 4 3

C) 3 1 4 2

D) 4 1 2 3

3. இன எழுத்துகள் தொடர்பான கூற்றுகளை கவனி?

1. ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமை உள்ள எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும்.

2. ஆறு வல்லின மெய் எழுத்துகளும், ஆறு மெல்லின் மெல்லின எழுத்துகளும் இன

எழுத்துகளாகும். எ.கா. திங்கள், மஞ்சள், மண்டபம், சந்தனம், அம்பு, தென்றல்.

3. இடையின எழுத்துகள் ஆறும் ஒரே இனமாகும்.

A) கூற்று 1, 3 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 2 மட்டும் சரி

D) கூற்று 1, 2, 3 சரி

4. நெய்தல் திணை தொடர்புடைய கீழ்க்கண்ட கூற்றில் சரியானது எது?

1. நிலம் - கடலும் கடல் சார்ந்த இடமும்

2. மக்கள் - ஆயர், ஆய்ச்சியர்

3. தொழில் - மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல்

4. பூ - பிடவம், தோன்றி

A) கூற்று 1, 3 மட்டும் சரி

B) கூற்று 2, 4 மட்டும் சரி

C) அனைத்தும் சரி

D) கூற்று 2, 3 மட்டும் சரி

5. பொருத்துக.

(a) Artificial Intelligence - 1) செயற்கைக் கோள்

(b) Intelligence - 2) செயற்கை நுண்ணறிவு

(c) Satellite - 3) மீத்திறன் கணினி

(d) Super Computer - 4) நுண்ணறிவு

A) 3 1 4 2

B) 4 3 1 2

C) 2 4 1 3

D) 4 3 2 1

6. நடுவு நின்ற நன்னெஞ்சினோர் ------ இவ்வடி இடம்பெற்றுள்ள நூல் எது?

A) குறுந்தொகை

B) நற்றிணை

C) அகநானூறு

D) பட்டினப்பாலை

7. வேலுநாச்சியார் தொடர்புடைய பின்வரும் கூற்றுகளை கவனி?

1. திண்டுக்கல் கோட்டையில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. கூட்டத்தின் நடுவே வேலுநாச்சியார் அமர்ந்திருந்தார்

2. வேலுநாச்சியாரை சுற்றி அவரது அமைச்சர் தாண்டவராயர் அமர்ந்து இருந்தார்.

3. வேலுநாச்சியாரை சுற்றி அவரது தளபதிகளான பெரிய மருது மற்றும் சின்ன மருது இருந்தனர்

A) கூற்று 1, 3 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 2 மட்டும் சரி

D) கூற்று 1, 2, 3 சரி

8. வ.உ.சி தொடர்பான கூற்றுகளை கவனி?

1. சென்னைக்கு செல்லும்போது பாரதியாரை சந்திப்பதை வழக்கமாக கொண்டிருந்தார்.

2. ஆங்கிலேயர்களின் கப்பல்களுக்கு போட்டியாக உள்நாட்டு இந்திய கப்பல் நிறுவனத்தை தொடங்கினார்.

3. வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், விடுதலைப் போராட்ட வீரர், தொழிற்சங்கத் தலைவர் என பன்முகத் தன்மை கொண்டிருந்தார்.

A) கூற்று 1, 3 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 2 மட்டும் சரி

D) கூற்று 1, 2, 3 சரி

9. தீவதிலகை தொடர்பான கீழ்காணும் கூற்றுகளில் சரியான கூற்றுகளை தேர்வுசெய்க.

1. மணிபல்லவத்தீவையும் , புத்த பீடிகையையும் காவல் செய்து வருபவள்.

2. பெருமை மிக்கவர்கள் மட்டுமே மணிபல்லவத்தீவிற்கு வந்து புத்த பீடிகையை வணங்க முடியும் என்று மணிமேகலையிடம் கூறினாள்

3. கோமுகி என்ற பூக்கள் நிறைந்த விளங்கும் பொய்கையை தீவதிலகையிடம் மணிமேகலை பார் என்றாள்.

A) கூற்று 1, 3 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 2 மட்டும் சரி

D) கூற்று 1, 2, 3 சரி

10. பொருத்துக.

(a) இடுகுறிப் பொதுப்பெயர் - 1) பறவை

(b) இடுகுறிச் சிறப்புப்பெயர் - 2) மரங்கொத்தி

(c) காரணப் பொதுப்பெயர் - 3) மரம்

(d) காரணச் சிறப்புப்பெயர் - 4) மா

A) 3 4 1 2

B) 3 1 2 4

C) 3 1 4 2

D) 3 4 2 1

11. திராவிட மொழியான தமிழிலிருந்து பிரிந்து சென்ற கிளைமொழிகளில் பொருத்தமற்றது?

A) தெலுங்கு

B) மலையாளம்

C) மராத்தி

D) கன்னடம்

12. உவமைக் கவிஞர் என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர்

A) இராசகோபலன்

B) வெ.இராமலிங்கனார்

C) உ.வே.சாமிநாதர்

D) அப்துல் ரகுமான்

13. முத்துராமலிங்கத்தேவர் தொடர்புடைய கீழ்க்கண்ட கூற்றில் சரியானது எது?

1. தமிழகச் சட்டமன்றத்தில் முத்துராமலிங்கத்தேவரின் திருவுருவப்படம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

2. சென்னையில் அரசு சார்பாகச் சிலை இவருக்கு அமைக்கப்பட்டுள்ளது மற்றும் இந்திய நாடாளுமன்ற வளாகத்திலும் சிலை வைக்கப்பட்டுள்ளது.

3. இந்திய அரசால் 1995இல் தபால் தலை வெளியிடப்பட்டது.

A) கூற்று 1, 3 மட்டும் சரி

B) கூற்று 1, 2 மட்டும் சரி

C) கூற்று 2, 3 மட்டும் சரி

D) அனைத்தும் சரி

14. பூம்புகார் துறைமுகத்திலிருந்து கப்பல்கள் மூலம் பொருள்கள் ஏற்றுமதியும் இயக்குமதியும் செய்யப்பட்டன என்பதை விரிவாகக் கூறும் நூல்

A) பட்டினப்பாலை

B) பதிற்றுப்பத்து

C) அகநானூறு

D) சேந்தன் திவாகரம்

15. கன்னிமாரா நூலகம் தொடர்பான கீழ்க்கண்ட கூற்றில் சரியானது எது?

1. இந்திய நாட்டின் களஞ்சிய நூலகங்களில் ஒன்றான இதில் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன.

2. கி.பி.1895ல் தொடங்கப்பட்ட கன்னிமாரா நூலகம் தமிழ்நாட்டின் மைய நூலகம் ஆகும்.

3. இந்தியாவில் வெளியிடப்படும் புத்தகங்கள், நாழிதழ்கள், பருவ இதழ்கள் ஆகியவற்றின் ஒரு படி (பிரதி) இங்குப் பாதுகாக்கப்படுகிறது.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 1, 3 மட்டும் சரி

C) அனைத்தும் சரி

D) கூற்று 2, 3 மட்டும் சரி

16. திருநெல்வேலி மாவட்டம் தொடர்புடைய பின்வரும் கூற்றுகளை கவனி?

1. திருநெல்வேலி மாவட்டப் பொருளாதாரத்தில் முதன்மையானப் பங்கு வகிப்பது உழவுத்தொழில் ஆகும்.

2. மூன்று பருவங்களிலும் திருநெல்வேலி மாவட்டத்தில் நெல் பயிரிடப்படுகிறது.

3. இராதாபுரம், நாங்குநேரி, அம்பாசமுத்திரம், தென்காசி போன்ற இடங்களில் பெருமளவில் வாழை பயிரிடப்படுகிறது.

A) கூற்று 1, 3 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 2 மட்டும் சரி

D) கூற்று 1, 2, 3 சரி

17. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை - இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி எது?

A) வேற்றுமையணி

B) இல்பொருள் உவமையணி

C) எடுத்துக்காட்டு உவமையணி

D) உவமை அணி

18. அறநெறிச்சாரம் எத்தனைப் பாடல்களைக் கொண்டது?

A) 215 பாடல்கள்

B) 225 பாடல்கள்

C) 235 பாடல்கள்

D) 245 பாடல்கள்

19. காயிதே மில்லத் தொடர்புடைய கீழ்க்கண்ட கூற்றில் சரியானது எது?

1. இந்தியா விடுதலைப் பெற்றப்பின் மாநிலங்களவை உறுப்பினர், மக்களவை உறுப்பினர் என பல பொறுப்புகளில் இருந்தார்.

2. இந்திய அரசியலமைப்பு உருவாக்கக் குழு உறுப்பினராக பணியாற்றினார்.

3. சென்னை மாகாணச் சட்டமன்ற உறுப்பினராக இருந்து 1952 முதல் 1958 வரை சிறப்பாகப் பணியாற்றினார்.

A) கூற்று 1, 3 மட்டும் சரி

B) கூற்று 1, 2 மட்டும் சரி

C) கூற்று 2, 3 மட்டும் சரி

D) அனைத்தும் சரி

20. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று கூறியவர்

A) ஔவையார்

B) சமண முனிவர்

C) தொல்காப்பியர்

D) திருவள்ளுவர்

21. மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை மரபுவழிப்பட்ட சொல்லின் ஆன - என்ற அடிகளைப் பாடியவர்

A) பாரதிதாசன்

B) மருதன் இளநாகனார்

C) பாரதியார்

D) தொல்காப்பியர்

22. பொருத்துக. (எழுத்துகளின் முயற்சிப்பிறப்பு)

(a) க், ங் - 1) நாவின் நுனி, அண்ண த்தின் நுனி

(b) ச், ஞ் - 2) மேல்வாய்ப் பல்லின் அடி, நாக்கின் நுனி

(c) ட், ண் - 3) நாவின் முதற்பகுதி, அண்ணத்தின் அடிப்பகுதி

(d) த், ந் - 4) நாவின் இடைப்பகுதி, நடு அண்ணத்தின் இடைப்பகுதி

A) 3 4 1 2

B) 2 1 4 3

C) 3 1 4 2

D) 4 1 2 3

23. வியங்கோள் வினைமுற்று தொடர்புடைய கீழ்க்கண்ட கூற்றில் சரியானது எது?

1. இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாக வரும்.

2. ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை.

3. வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும்.

4. விகுதிப்பெற்றும் பெறாமலும் வரும்.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3, 4 மட்டும் சரி

C) கூற்று 1, 2, 3 மட்டும் சரி

D) கூற்று 1, 2, 4 மட்டும் சரி

24. கவிமணி தொடர்பான கீழ்க்கண்ட கூற்றில் சரியானது எது?

1. குமரி மாவட்டம் தேரூரில் பிறந்தவர். முப்பத்தாறு ஆண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

2. ஆசியஜோதி , மருமக்கள் வழி மான்மியம், கதர் பிறந்த கதை உள்ளிட்ட பல கவிதை நூல்களை எழுதியுள்ளார்.

3. உமர்கய்யாம் பாடல்கள் என்னும் மொழிபெயர்ப்பு நூலையும் படைத்துள்ளார்.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 1, 3 மட்டும் சரி

C) கூற்று 2, 3 மட்டும் சரி

D) அனைத்தும் சரி

25. பொருத்துக. (உவமைத் தொடர்)

(a) காக்கை உட்கார பனம்பழம் விழுந்தது போல - 1) புகழ்

(b) நெல்லிக்காய் மூட்டையைக் கொட்டினாற் போல - 2) தற்செயல் நிகழ்வு

(c) குன்றின் மேலிட்ட விளக்கைப் போல - 3) மன்னன் மக்களை துன்புறுத்தல்

(d) வேலியே பயிரை மேய்ந்தது போல - 4) ஒற்றுமையின்மை

A) 2 1 4 3

B) 2 4 1 3

C) 4 2 1 3

D) 4 3 2 1

26. பொருத்துக.

(a) தெரிநிலை பெயரெச்சம் - 1) எழுதி வந்தான்

(b) குறிப்புச் பெயரெச்சம் -2) சிறிய கடிதம்

(c) தெரிநிலை வினையெச்சம் - 3) மெல்ல வந்தான்

(d) குறிப்பு வினையெச்சம் - 4) எழுதிய கடிதம்

(a) 2 1 4 3

(b) 2 4 1 3

(c) 4 2 1 3

(d) 4 3 2 1

27. உடுக்கை தொடர்பாக கொடுக்கப்பட்டிருக்கும் வாசகங்களைக் கருத்தில் கொள்க.

1. இறை வழிப்பாட்டின்போதும் குறிசொல்லும் போதும் இசைக்கப்படுகிறது.

2. தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம் பயில்வார் - சம்பந்தர் தேவாரம்

3. தில்லையில் நடனமாடும் நடராசாரின் கைகளில் உள்ளது.

4. பெரிய உடுக்கையை குடுகுடுப்பை என அழைப்பர்.

A) (1) மற்றும் (2) சரியானது

B) (1), (2), மற்றும் (4) சரியானது

C) (1), (2) மற்றும் (3) சரியானது

D) அனைத்தும் சரி

28. பொருத்துக.

(a) மறலி - 1) புதர்

(b) கரி - 2) தமிழர்

(c) தூறு - 3) கலன்

(d) அருவர் - 4) யானை

A) 3 4 1 2

B) 2 1 4 3

C) 3 1 4 2

D) 4 1 2 3

29. தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும் சீர்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தவர்

A) நாராயண குரு, தங்கவயல் அப்பாதுரை

B) தங்கவயல் அப்பாதுரை, அம்பேத்கர்

C) அம்பேத்கர், அயோத்திதாசர்

D) அயோத்திதாசர், தங்கவயல் அப்பாதுரை

30. பொருத்துக

(a) சீர் - 1) 8

(b) தளை - 2) 5

(c) அடி - 3) 7

(d) தொடை - 4) 4

A) 2 1 4 3

B) 2 4 1 3

C) 4 2 1 3

D) 4 3 2 1

31. யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் - இவ்வடிகளை பாடியவர் யார்?

A) பாரதிதாசன்

B) திரு.வி.க

C) கவிமணி

D) பாரதியார்

32. பொருத்துக.

(a) ஏந்தி - 1) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

(b) முத்திக்கனி - 2) பெயரெச்சத் தொடர்

(c) சிந்தா மணி - 3) உருவகம்

(d) ஆடுங்களை - 4) வினையெச்சம்

A) 4 3 1 2

B) 3 4 1 2

C) 3 1 4 2

D) 4 1 2 3

33. விறகுநான் வண்டமிழே! உன்னருள் வாய்த்த பிறகுநான் வீணையாய்ப் போனேன் - என்ற பாடல் அடிகளைப் பாடியவர்

A) கவிஞர் வைரமுத்து

B) கவிஞர் வாலி

C) கவிஞர் கண்ண தாசன்

D) கவிஞர் தமிழ்ஒளி

34. பொருத்துக.

(a) சிவப்பு ரிக்ஷா - 1) பேரறிஞர் அண்ணா

(b) இன்ப ஒளி - 2) தி.ஜானகிராமன்

(c) சிறுபஞ்சமூலம் - 3) பாரதிதாசன்

(d) தமிழியக்கம் - 4) காரியாசான்

A) 3 4 1 2

B) 2 1 4 3

C) 3 1 4 2

D) 4 1 2 3

35. நாகசுரக் கருவிகள் செய்யப் பயன்படும் மரம் எது?

A) வேங்கை மரம்

B) கொன்றை மரம்

C) ஆச்சா மரம்

D) தாழை மரம்

36. விக்ரம் சாராபாய் தொடர்பான பின்வரும் கூற்றுகளை கவனி?

1. இவரின் பெயரால் விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் பெங்களூரில் செயல்பட்டு வருகிறது.

2. ஆரியபட்டா என்ற முதல் செயற்கைக்கோள் ஏவுதலுக்குக் காரணமானவர் விக்ரம் சாராபாய்.

3. இவருடைய முயற்சியால் இஸ்ரோ (ISRO) தொடங்கப்பட்டது.

A) கூற்று 2, 3 மட்டும் சரி

B) கூற்று 1, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 2 மட்டும் சரி

D) கூற்று 1, 2, 3 சரி

37. மயில்சாமி அண்ணாதுரை தொடர்பான கீழ்க்கண்ட கூற்றில் சரியானது எது?

1. இளைய கலாம் என்று அன்புடன் அழைக்கப்படும் இவர் கோவை மாவட்டம் கோதவாடி என்னும் சிற்றூரில் பிறந்தவர்.

2. சந்திராயன் - 1 திட்டத்தின் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர்.

3. 1981 ஆம் ஆண்டு இந்திய விண்வெளி ஆய்வு மையத்தில் பணியில் சேர்ந்த இவர் தற்போது இயக்குநராகப் பணிபுரிகிறார்.

A) கூற்று 2, 3 மட்டும் சரி

B) கூற்று 1, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 2 மட்டும் சரி

D) அனைத்தும் சரி

38. முத்துலட்சுமி தொடர்பான கீழ்க்கண்ட கூற்றில் சரியானது எது?

1. அடையாற்றில் 1929இல் அவ்வை இல்லம், 1950ல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவினார்.

2. தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர், இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர்.

3. சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி, தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேற காரணமாக இருந்தவர்.

A) கூற்று 2, 3 மட்டும் சரி

B) கூற்று 1, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 2 மட்டும் சரி

D) அனைத்தும் சரி

39. தென்னகத்துப் பெர்னாட்ஷா என அழைக்கப்படும் எழுத்தாளர்

A) பேரறிஞர் அண்ணா

B) தந்தை பெரியார்

C) பாரதிதாசன்

D) புதுமைப்பித்தன்

40. எந்த ஆண்டு சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில் ஈ.வெ.ரா. வுக்குப் பெரியார் என்னும் பட்டம் வழங்கப்பட்டது?

A) 13.09.1938

B) 13.10.1938

C) 13.11.1938

D) 13.12.1938

41. புதுக்கவிதையை இலகு கவிதை, கட்டற்ற கவிதை , விலங்குகள் இலாக் கவிதை, கட்டுக்குள் அடங்காக் கவிதை எனப் பல்வேறு பெயர்களில் குறிப்பிட்டவர்

A) வண்ண தாசன்

B) து.சமுத்திரம்

C) வல்லிக்கண்ணன்

D) ந.பிச்சமூர்த்தி

42. ஒப்புடன் முகம் மலர்ந்தே உபசரித்து உண்மை பேசி - இப்பாடல் அடி இடம்பெற்ற நூல்

A) விவேகசிந்தாமணி

B) குண்டலகேசி

C) சீவகசிந்தாமணி

D) கலிங்கத்துப்பரணி

43. பொருத்துக. (இலை வகை)

(a) இலை - 1) தென்னை

(b) தோகை - 2) காய்ந்த தாள்

(c) ஓலை - 3) புளி

(d) சண்டு - 4) சோளம்

A) 3 4 1 2

B) 2 1 4 3

C) 3 1 4 2

D) 4 3 2 1

44. குலசேகர ஆழ்வார் பாடிய பெருமாள் திருமொழியிலுள்ள பாடல்களின் எண்ணிக்கை

A) 103

B) 105

C) 102

D) 104

45. பொருத்துக. (இலக்கணக் குறிப்பு)

(a) கேள்வியினான் - 1) எண்ணும்மை

(b) காடனுக்கும் கபிலனுக்கும் -2) வியங்கோள் வினைமுற்று

(c) ஆடுக - 3) பண்புத்தொகை

(d) செந்தமிழ் பெயர் - 4) வினையாலணையும்

A) 4 3 1 2

B) 3 4 1 2

C) 3 1 4 2

D) 4 1 2 3

46. அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம் -------- சிறிய ஆகப் பெரியோன் தெரியின் - இப்பாடல் அடி இடம்பெற்ற நூல்

A) பதிற்றுப்பத்து

B) பெருமாள் திருமொழி

C) பரிபாடல்

D) திருவாசகம்

47. பொருத்துக. (பிறந்த மாவட்டம்)

(a) உமா மகேஸ்வரி - 1) கன்னியாகுமரி

(b) செய்குதம்பிப் பாவலர் - 2) மதுரை

(c) சா.கந்தசாமி - 3) தூத்துக்குடி

(d) குமரகுருபரர் - 4) நாகப்பட்டினம்

A) 2 1 4 3

B) 2 4 1 3

C) 4 1 2 3

D) 4 2 1 3

48. ம.பொ.சிவஞானம் தொடர்பான பின்வரும் கூற்றுகளை கவனி?

1. தந்தையார் பெயர் - பொன்னுசாமி , அன்னையின் பெயர் - சிவகாமி, பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் - ஞானப்பிரகாசம்.

2. சரபையர் என்ற முதியவர் ஒருவர் இவருடைய பெயரை மாற்றி சிவஞானி என்றே அழைத்தார்.

3. இவரின் கேள்வி ஞானத்தைப் பெருக்கிய பெருமையிலே திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளுக்கே மிகுந்த பங்குண்டு.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) கூற்று 1, 2, 3 சரி

49. பொருத்துக. (நூல் - ஆசிரியர்)

(a) யானை சவாரி - 1) திலகவதி

(b) கல்மரம் - 2) நாகூர் ரூமி

(c) அற்றைத் திங்கள் அவ்வெண்ணலவில் - 3) பாவண்ணன்

(d) கப்பலுக்குப் போன மச்சான் - 4) ந.முருகேச பாண்டியன்

A) 3 4 1 2

B) 2 1 4 3

C) 3 1 4 2

D) 4 1 2 3

50. கிருஷ்ணம்மாள் ஜெகநாதன் கலந்துகொண்ட விடுதலைப் போராட்டங்களில் பொருத்தமற்றது?

A) சட்ட மறுப்பு இயக்கம்

B) ஒத்துழையாமை இயக்கம்

C) வெள்ளையனே வெறியேறு இயக்கம்

D) சுதேசி இயக்கம்

51. பொருத்துக. (சொல் - பொருள்)

(a) பால் - 1) மாளிகை

(b) இயல்பு- 2) மூங்கில்

(c) மாடம் - 3) வகை

(d) அமை - 4) இலக்கணம்

A) 4 3 1 2

B) 3 4 1 2

C) 3 1 4 2

D) 4 1 2 3

52. பொருத்துக. (இலக்கணக்குறிப்பு)

(a) கோடல் - 1) முற்றும்மை

(b) ஐந்தும் - 2) தொழிற்பெயர்

(c) கேட்போர் - 3) உரிச்சொற்றொடர்

(d) மாநகர் - 4) வினையாலணையும் பெயர்

A) 4 3 1 2

B) 4 3 2 1

C) 2 1 4 3

D) 4 1 2 3

53. கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி தொடர்பான கூற்றுகளில் சரியான கூற்றுகள் எவை?

1. அரிய பண்புகள் அனைத்தையும் தம் இளமைக்காலத்திலேயே பெற்றிருந்த காரணத்தால் அக்கால மக்கள் இவரை இளம்பெருவழுதி என்று அழைத்தனர்.

2. கடற்பயணம் ஒன்றில் இறந்துபோனமையால் இவர், கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்று பிற்காலத்தவரால் அழைக்கப்படுகின்றார்.

3. சோழ மன்னருள் பெருவழுதி என்னும் பெயரில் பலர் இருந்தனர்.

A) கூற்று 1, 3 மட்டும் சரி

B) கூற்று 1, 2 மட்டும் சரி

C) கூற்று 2, 3 மட்டும் சரி

D) கூற்று 1, 2, 3 சரி

54. பண்பாட்டு அசைவுகள் என்னும் நூலின் ஆசிரியர்

A) அ.முத்துலிங்கம்

B) சு.வில்வரத்தினம்

C) அ.கி.பரந்தாமனார்

D) தொ.பரமசிவன்

55. தமிழின் சிறப்பு தொடர்பான கூற்றுகளில் சரியான கூற்றுகள் எவை?

1. இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது.

2. கம்பன் தமிழ் தழீஇய சாயலவர் என்னும் இடத்து தமிழ் என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

3. திருவாசகம் போன்ற பக்தி இலக்கியங்களில் தமிழ், பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது.

A) கூற்று 1, 3 மட்டும் சரி

B) கூற்று 1, 2 மட்டும் சரி

C) கூற்று 2, 3 மட்டும் சரி

D) கூற்று 1, 2, 3 சரி

56. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல் - இக்குறட்பாவில் பயின்றுவந்துள்ள அணி

A) சொற்பொருள் பின்வரும் நிலையணி

B) உருவக அணி

C) பிறிது மொழிதல் அணி

D) வேற்றுமை அணி

57. பாரதியார் தொடர்பான பின்வரும் கூற்றுகளை கவனி?

1. சித்திராவானி என்ற பெயரில் கருத்துப்படங்களை மட்டுமே கொண்ட இதழ் ஒன்றை நடத்த விரும்பினார்.

2. இந்தியா, விஜயா ஆகிய இரு இதழ்களிலும் கருத்துப் படங்களை வெளியிட்டுள்ளார்.

3. தமிழ் இதழியல் துறையில் முதன் முதலாகக் கருத்துப் படங்களை அறிமுகம் செய்து வைத்தவர் பாரதியார்.

A) கூற்று 1, 3 மட்டும் சரி

B) கூ ற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 2 மட்டும் சரி

D) கூற்று 1, 2, 3 சரி

58. பொருத்துக. (விலங்கு)

(a) குறிஞ்சி - - 1) மான்

(b) முல்லை - 2) கரடி

(c) பாலை - 3) செந்நாய்

(d) மருதம் - 4) நீர்நாய்

A) 3 4 1 2

B) 2 1 4 3

C) 2 1 3 4

D) 4 3 2 1

59. ஜீவா என்று அழைக்கப்படும் ப.ஜீவானந்தத்துடன் தொடர்புடையவை

A) காந்தியவாதி

B) சுயமரியாதை இயக்கப் போராளி

C) பொதுவுடைமை இயக்கத் தலைவர்

D) மேற்கூறிய அனைத்தும்

60. மயிலை சீனி.வேங்கடசாமி தொடர்பான பின்வரும் கூற்றுகளை கவனி?

1. இராமேசுவரத் தீவு, உறையூர் அழிந்த வரலாறு, மறைந்துபோன மருங்காப்பட்டினம் போன்ற கட்டுரைகளை இயற்றினார்.

2. மதுரைப் பல்கலைக்கழகம் 1981 ஆம் ஆண்டு தமிழ்ப் பேரவைச் செம்மல் என்னும் பட்டமளித்துப் பாராட்டியது.

3. இயற்றிய நூல்கள் - கொங்கு நாட்டு வரலாறு, துளுவ நாட்டு வரலாறு, சேரன் செங்குட்டுவன், மகேந்திரவர்மன் , நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன்.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) கூற்று 1, 2, 3 சரி

61. பொருத்துக. (நூல் - ஆசிரியர்)

(a) பக்தவத்சல பாரதி - 1) கொம்மை

(b) பூமணி - 2) பண்பாட்டு மானிடவியல்

(c) சிற்பி பாலசுப்பிரமணியம் - 3) திருவருள் அந்தாதி

(d) மாயூரம் வேதநாயகம் - 4) நிலவுப்பூ

A) 1 2 4 3

B) 2 4 1 3

C) 2 1 4 3

D) 2 3 4 1

62. அன்புஉள, இனி, நாம் ஓர்

ஐவர்கள் உளர் ஆனோம் - இவ்வடி இடம்பெற்ற நூல்

A) நெடுநல்வாடை

B) கம்பராமாயணம்

C) நிலவுப்பூ

D) தண்டியலங்காரம்

63. பரலி சு.நெல்லையப்பர் தொடர்பான பின்வரும் கூற்றுகளை கவனி?

1. நெல்லைத்தென்றல் என்னும் கவிதை நூலை எழுதினார்.

2. லோகோபகாரி, தேசபக்தன் ஆகிய இதழ்களில் துணை ஆசிரியராகவும் பிறகு ஆசிரியராகவும் பணியாற்றினார்.

3. பாரதி நடத்திய இந்தியா, விஜயா ஆகிய இதழ்களில் துணை ஆசிரியராகப் பணியாற்றியவர்.

A) கூற்று 1, 3 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 2 மட்டும் சரி

D) கூற்று 1, 2, 3 சரி

64. கீழ்க்கண்ட கூற்றுகளை கவனித்து சரியான விடையை தேர்ந்தெடு ?

1. பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது, நெடுநல்வாடை.

2. நெடுநல்வாடை, பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மற்றும் 188 அடிகளைக் கொண்டது.

3. நெடுநல்வாடை, ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) கூற்று 1, 2, 3 சரி

65. வள்ளுவனைப் பெற்றதால்

பெற்றதே புகழ் வையகமே - எனப் புகழ்ந்து பாடியவர்

A) கவிமணி

B) திருவள்ளுவர்

C) பாரதியார்

D) பாரதிதாசன்

66. சோமசுந்தர பாரதியார் தொடர்பான கூற்றுகளில் சரியான கூற்றுகள் எவை?

1. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி உள்ளார்.

2. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னின்று செயலாற்றியவர் மற்றும் சமூக சீர்திருத்தங்களில் ஈடுபாடுகொண்டு சடங்குகள் இல்லாத திருமண விழாக்களை முன்னின்று நடத்தியவர்.

3. திருவள்ளுவர், சேரர் தாயமுறை, தமிழும் தமிழரும் முதலிய பல நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

A) கூற்று 1, 3 மட்டும் சரி

B) கூற்று 1, 2 மட்டும் சரி

C) கூற்று 2, 3 மட்டும் சரி

D) கூற்று 1, 2, 3 சரி

67. பொருத்துக. (நூல் - ஆசிரியர்)

(a) மருமக்கள் வழி மான்மியம் - 1) கண்ண தாசன்

(b) மாங்கனி - 2) கவிமணி

(c) பாரதசக்தி மகா காவியம் - 3) புலவர் குழந்தை

(d) இராவண காவியம் - 4) கவியோகி சுத்தானந்த பாரதியார்

A) 1 2 4 3

B) 2 4 1 3

C) 2 1 4 3

D) 2 3 4 1

68. பொருத்துக.(கலைச்சொற்கள்)

(a) Artist - 1) செய்திப்படம்

(b) Animation - 2) ஒளிப்பதிவு

(c) Newsreel - 3) இயங்குபடம்

(d) Cinematography - 4) கவின்கலைஞர்

A) 3 1 4 2

B) 4 3 1 2

C) 4 1 2 3

D) 4 3 2 1

69. இரட்சணிய யாத்திரிகம் தொடர்பான கூற்றுகளில் சரியான கூற்றுகள் எவை?

1. திருநெல்வேலியில் இருந்து வெளிவந்த நற்போதகம் எனும் ஆன்மீக மாத இதழில் இரட்சணிய யாத்திரிகம் பதின்மூன்று ஆண்டுகள் தொடராக வெளிவந்தது.

2. இரட்சணிய யாத்திரிகம், 1894 ஆம் ஆண்டு மே திங்களில் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டது.

3. ஜான் பன்யன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ் எனும் ஆங்கில நூலின் தழுவலாக இரட்சணிய யாத்திரிகம் படைக்கப்பட்டது.

A) கூற்று 1, 3 மட்டும் சரி

B) கூற்று 1, 2 மட்டும் சரி

C) கூற்று 2, 3 மட்டும் சரி

D) கூற்று 1, 2, 3 சரி

70. ஓய்மாநாட்டு மன்னனான நல்லியக்கோடனைப் பாட்டுடைத் தலைவனாக் கொண்டு 269 அடிகளில் எழுதப்பட்ட நூல்

A) நெடுநல்வாடை

B) பொருநராற்றுப்படை

C) சிறுபாணாற்றுப்படை

D) பெரும்பாணாற்றுப்படை

71. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க

A) அந்தணர், ஆண்மை , ஆற்றல், ஏக்கம்

B) ஆண்மை , ஏக்கம், அந்தணர், ஆற்றல்

C) ஆற்றல், அந்தணர், ஆண்மை , ஏக்கம்

D) ஏக்கம், அந்தணர், ஆற்றல், ஆண்மை

72. அகவர வரிசைப்படி சொற்களை சீர் செய்க

A) சென்று, சார்பு, சால்பு, மூழ்கு

B) சார்பு, சால்பு, மூழ்கு, சென்று

C) சார்பு, சால்பு, சென்று, மூழ்கு

D) மூழ்கு, சென்று, சால்பு, சார்பு

73. ”நகமும் சதையும் போல” - உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமானப் பொருளைத்தேர்தெடுக்க

A) பிரிக்க முடியாதது

B) பிரிக்க முடியும்

C) சிறப்பு

D) புகழ்

74. "சேற்றில் முளைத்த செந்தாமரைப் போல" - உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமானப் பொருளைத்தேர்தெடுக்க

A) சிறப்பின்மை

B) வெறுமை

C) குளிர்ச்சி

D) சிறப்பு

75. எதிர்சொல் தருக : ஓடுமீன்

A) உறுமீன்

B) சிறுமீன்

C) ஓடும்மீன்

D) வருமீன்

76. எதிர்ச்சொல் தருக : ஒற்றுமை

A) ஒன்றாமை

B) வேற்றுமை

C) சேராமை

D) பிரிதல்

77. மோனை வகையைக் கண்டுபிடி:

தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்

வானம் வழங்கா தெனின்

A) முற்று மோனை

B) கூழை மோனை

C) இணை மோனை

D) ஒரூஉ மோனை

78. நின்றனன் அவ்வழி நிகழ்ந்த தென்னெனில

துன்றுபூஞ் சோலைவாய் அரக்கன்

- சீர்மோனையைச் சுட்டுக

A) நின்றனன் - அவ்வழி

B) நிகழ்ந்த - தென்னெனில

C) நின்றனன் - நிகழ்ந்த

D) நிகழ்ந்த- சோலைவாய்

79. செயற்கைக்கோள் அறிவியல் அறிஞர்களால் விண்ணில் ஏவப்பட்டது - எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக

A) செய்வினை வாக்கியம்

B) உடன்பாட்டு வாக்கியம்

C) எதிர்மறை வாக்கியம்

D) செயப்பாட்டு வினை வாக்கியம்

80. நல்ல பண்பைக் காப்பது தான் உனது கடமை என்பதை நன்றாக உணர்ந்துகொள் - எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக

A) கட்டளை வாக்கியம்

B) தனி வாக்கியம்

C) விழைவு வாக்கியம்

D) உணர்ச்சி வாக்கியம்

81. ஒருமைப் பன்மை பிழைகளற்ற வாக்கியங்களைக் கண்டறிக

1) இங்குள்ளது எல்லாம் நல்ல பழமே

2) இங்குள்ளவை எல்லாம் நல்ல பழங்களே

3) விழாவில் மக்கள் கிடையாது

4) விழாவில் மக்கள் இல்லை

A) 1 மற்றும் 3

B) 2 மற்றும் 3

C) 2 மற்றும் 4

D) 1 மற்றும் 4

82. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க

	உறு	உரு
A)	மிகுதி	வடிவம்
B)	தகுதி	படிவம்
C)	விகுதி	கடினம்
D)	பகுதி	நளினம்

83. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க

	அளகு	அலகு
A)	சேவல்	பக்கம்
B)	குரங்கு	நீளம்
C)	காட்டுக்கோழி	அளவைக்கூறு
D)	அகலம்	சோலை

84. சந்திப்பிழையற்ற தொடரைத் தேர்க?

A) புரட்சிப் பூக்கள் பூத்துக் குலுங்கிய புதுவையில் புரட்சி கவிஞர் பாரதிதாசன் தோன்றினார்

B) புரட்சிப் பூக்கள் பூத்து குலுங்கிய புதுவையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தோன்றினார்

C) புரட்சி பூக்கள் பூத்துக் குலுங்கிய புதுவையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தோன்றினார்

D) புரட்சிப் பூக்கள் பூத்துக் குலுங்கிய புதுவையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தோன்றினார்

85. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக

A) பின்னிப் பிணைந்ததே அன்பும் அறனும் மனிதநேயம்

B) மனிதநேயம் பின்னிப் பிணைந்ததே அன்பும் அறமும்

C) அன்பும் அறமும் பின்னிப்பிணைந்ததே மனிதநேயம்

D) மனிதநேயம் அறமும் அன்பும் பின்னிப்பிணைந்ததே

86. தன்வினை வாக்கியத்தை கண்டறிக

A) புதியதோர் உலகம் செய்விப்போம்

B) உலகம் புதியதோர் செய்வோம்

C) செய்வோம் புதியதோர் உலகம்

D) புதியதோர் உலகம் செய்வோம்

87. பிரித்து எழுதுக : நல்லஃதுறும்

A) நல்ல + அஃது + உறும்

B) நன்மை + அஃது + உறும்

C) நல்லஃது + உறும்

D) நன்மை + அது + உறும்

88. பிரித்து எழுதுக : புறத்துறுப்பு

A) புறம் + உறுப்பு

B) புறத்து + உறுப்பு

C) புற + உறுப்பு

D) புற + துறுப்பு

89. பிறமொழிச் சொற்களற்ற வாக்கியத்தை தேர்வு செய்க

A) அவனுக்கு சென்ட்ரல் கவர்ன்மெண்டில் பணி கிடைத்தது

B) அவனுக்கு மத்திய அரசில் உத்தியோகம் கிடைத்தது

C) அவனுக்கு நடுவண் அரசில் பணி கிடைத்தது

D) அவனுக்கு நடுவண் அரசில் உத்தியோகம் கிடைத்தது

90. பிறமொழிச் சொற்களற்ற வாக்கியத்தை தேர்வு செய்க

A) பிரதமரின் டி.வி. பேட்டி நாளை வரும்

B) பிரதமரின் தொலைக்காட்சிப் பேட்டி நாளை வரும்

C) பிரதமரின் டி.வி. நேர்காணல் நாளை வரும்

D) பிரதமரின் தொலைக்காட்சி நேர்காணல் நாளை வரும்

91. பிறவினைச் சொற்றொடரைக் கண்டறிக

A) மாதவி நடனம் கற்பித்தாள்

B) மாதவி நடனம் கற்றாள்

C) நடனம் மாதவியால் கற்கப்பட்டது

D) மாதவி நடனம் கல்லாள்

92. 'வருகை' - பெயர்ச் சொல்லின் வகை அறிக

A) தொழிற்பெயர்

B) பண்புப்பெயர்

C) காலப்பெயர்

D) சினைப்பெயர்

93. 'நாற்காலி - பெயர்ச் சொல்லின் வகை அறிக

A) காலப்பெயர்

B) பொருட்பெயர்

C) சினைப்பெயர்

D) தொழிற்பெயர்

94. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக

A) கிளி

B) குயில்

C) பாம்பு

D) மயில்

95. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக

A) ஓடுதல்

B) ஆடுதல்

C) பாடுதல்

D) தேர்தல்

96. மரபுச் சொற்களின் அடிப்படையில் பின்வருவனவற்றுள் எது சரியானது?

A) ஆட்டுத்தொழுவத்தின் அருகே குயில் கரைவதைக் கேட்டுக் கழுதை கனைத்தது

B) ஆட்டுப்பட்டி அருகே குயில் கூவியதைக் கேட்ட கழுதை கத்தியது

C) ஆட்டுப்பட்டி அருகே குயில் கூவியதைக் கேட்ட கழுதை கனைத்தது

D) ஆட்டுக்கொட்டில் அருகே குயில் கரைவதைக் கேட்டுக் கழுதை கத்தியது

97. ஓடையில் யானையும் யானைக் ..... ம் நின்றன

A) யானைக் கன்று

B) யானைக் குட்டி

C) யானைக் குருளை

D) யானைப் பிள்ளை

98. வழுவற்ற வாக்கியம் எது?

A) மந்தையாக மேய்ந்து கொண்டிருந்த மாட்டைப் புலி துரத்தின

B) மந்தையாக மேய்ந்து கொண்டிருந்த மாடுகளைப் புலித் துரத்தின

C) மந்தையாக மேய்ந்து கொண்டிருந்த மாடுகளைப் புலி துரத்தியது

D) மந்தையாக மேய்ந்து கொண்டிருந்த மாட்டைப் புலி துரத்தியது

99. விடைக்கேற்ற வினா அமைக்க

மங்கம்மாளின் பெயர் மங்காத புகழோடு விளங்கும் என்பதில் ஐயமில்லை

A) யாருடைய புகழ் மங்காது விளங்கும் என்பதில் ஐயமில்லை ?

B) யாருடைய பெயர் மங்காது விளங்கும் என்பதில் ஐயமில்லை ?

C) யாருடைய பெயர் மங்காத புகழோடு விளங்கும் என்பதில் ஐயமில்லை ?

D) யாருடைய பெயர் புகழோடு விளங்கும் என்பதில் ஐயமில்லை ?

100. ஓரெழுத்து ஒரு மொழி எத்தனை உள்ளன?

A) நாற்பத்திரண்டு

B) ஐம்பத்திரண்டு

C) முப்பத்திரண்டு

D) எழுபத்திரண்டு

101. ___ ல் ஒலி அலைகள் வேகமாக பயணிக்கும்.

(A) திரவங்களில்

(B) வாயுக்களில்

(C) திடப்பொருளில்

(D) வெற்றிடத்தில்

102. ஒளி ஒரு ஊடகத்திலிருந்து மற்றொரு ஊடகத்திற்குச் செல்லும்போது எந்த படு கோணத்தில் ஒளிவிலகல் அடையாது?

(A) 0°

(B) 45°

(C) 90°

(D) 120°

103. நீருள்ள வாளியில் காற்றுப் புகாத அடைப்பானால் மூடப்பட்ட காலி பிளாஸ்டிக் பாட்டில் ஒன்று கீழ்நோக்கி அழுத்தப்படுகிறது. பாட்டில் கீழ்நோக்கி தள்ளப்படும் போது அதன் அடிப்பகுதியில் செயல்படும் விசையானது அதிகரிக்கிறது. இதற்கான காரணம் என்ன?

(A) அதிக பருமனுள்ள நீர் வெளியேற்றப்படுகிறது.

(B) அதிக எடையுள்ள நீர் வெளியேற்றப்படுகிறது.

(C) ஆழம் அதிகரிக்கும் போது அழுத்தம் அதிகரிக்கின்றது.

(D) மேலே கூறிய யாவும்

104. பின்வருவனவற்றுள் அதிர்வுகளின் பண்புகள் எவை?

i. அதிர்வெண் ii. கால அளவு iii. சுருதி iv. உரப்பு

(A) i மற்றும் ii

(B) ii மற்றும் iii

(C) iii மற்றும் iv

(D) i மற்றும் iv

105. அனேக இளம் நட்சத்திரங்களைக் கொண்ட விண்மீன் திரளுக்கு என்று பெயர்.

(A) நீள்வட்ட விண்மீன் திரள்

(B) ஒழுங்கற்ற விண்மீன் திரள்

(C) குழுக்கள்

(D) சுருள் விண்மீன் திரள்

106. மின் உருகி என்பது ஒரு

(A) சாவி

(B) குறைந்த மின்தடை கொண்ட ஒரு மின்கம்பி

(C) அதிக மின்தடை கொண்ட ஒரு மின்கம்பி

(D) மின்சுற்றை தடை செய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு பாதுகாப்புக் கருவி

107. பொருத்துக:

காரங்கள்	pH மதிப்பு
a. சமையல் சோடா	- 1. 7.4
b. கடல் நீர்	- 2. 12

c . அம்மோனியா நீர் - 3. 11

d. சுண்ணாம்பு நீர் - 4. 8

e. இரத்த பிளாஸ்மா - 5.9

A. 1 2 3 4 5

B. 5 1 4 3 2

C. 5 4 3 2 1

D. 1 3 4 5 2

108. பின்வருவனவற்றில் சரியானவற்றைத் தேர்ந்தெடு:

1. இரு தனிமங்கள் இணைந்து ஒன்றுக்கு மேற்பட்ட சேர்மங்களை உருவாக்கும்.

2. மந்தவாயுக்கள் அனைத்தும் ஓரணு மூலக்கூறுகள்.

3. தனிமங்களின் கிராம் அணுநிறைக்கு அலகு உள்ளது.

4. Co_2, -ன் மோலார் நிறை 42 கி.

A. 1,2 சரி 3,4 தவறு

B. 1, 3 சரி 2, 4 தவறு

C. 1,2,3 சரி 4 தவறு

D. 1, 2, 4 சரி

109. பின்வரும் கூற்றுகளை ஆராய்க:

கூற்று A : அலுமினியத்தின் அணுநிறை 27.

காரணம் R : ஒரு அலுமினியம் அணுவின் நிறையானது 1/12 பங்கு கார்பன்-12 -ன் நிறையைவிட 27 மடங்கு அதிகம்.

A. A மற்றும் R சரி R,A ஐ விளக்குகிறது

B. A சரி R தவறு

C. A தவறு R சரி

D. A மற்றும் R சரி R,A -க்கான சரியான விளக்கம் அல்ல

110. பொருத்துக:

a. புவி ஈர்ப்பு முறை- 1. Fe_2O_3

b. காந்த முறை ஈர்ப்பு - 2. SnO_2,

C. நுரைமிதப்பு முறை - 3. ZnS

d. வேதி முறை- 4. Al_2O_3, $2H_2O$

A. 1 3 4 2

B. 1 2 3 4

C. 4 3 2 1

D. 4 2 1 3

111. மெல்லிய படலமாக துத்தநாக படிவை, பிற உலோகத்தின் மீது ஏற்படுத்தும் நிகழ்வு ---- எனப்படும்.

A. வர்ணம் பூசுதல்

B. நாகமுலாமிடல்

C. மின்முலாம் பூசுதல்

D. மெல்லியதாக்கல்

112. பின்வருவனவற்றில் தவறானவற்றைத் தேர்ந்தெடு:

A. திண்மம் + திண்மம் = பாதரசத்துடன் கலந்த சோடியம்.

B. திரவம் + திண்மம் = பாதரசத்துடன் கலந்த சோடியம்.

C. திரவம் + திரவம் = நீரில் கரைக்கப்பட்ட எத்தில் ஆல்கஹால்.

D. திரவம் + வாயு = காற்றில் உள்ள நீராவி.

113. கூற்று:சந்தைப்படுத்தப்படும்காய்கறிகளில் சைட்டோகைனினைத் தெளிப்பது அவை பல நாட்கள் கெடாமல் இருக்கச் செய்யும்.

காரணம் :சைட்டோகைனின்கள் கனிம ஊட்ட இடப்பெயர்ச்சியினால் இலைகள் மற்றும் ஏனைய உறுப்புகள் முதுமையடைவதைத் தாமதப்படுத்துகின்றன.

A. கூற்று (ம) காரணம் சரி மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

B. கூற்று (ம) காரணம் சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

C. கூற்று சரி காரணம் தவறு.

D. கூற்று தவறு காரணம் சரி

114. பொருத்துக:

a. ஆட்டோசோம்கள் - 1. டிரைசோமி 21

b. இருமய நிலை - 2. 9:3:3:1

c. அல்லோசோம்கள் - 3. 22 ஜோடி குரோமோசோம்கள்

d. டவுன் நோய்க் கூட்டு அறிகுறி - 4. 2n

e. இருபண்புக் கலப்பு - 5. 23வது ஜோடி குரோமோசோம்கள்

A. 3 4 5 1 2

B. 3 4 5 2 1

C. 1 5 4 3 2

D. 3 5 1 3 4

115. எந்நிகழ்ச்சி காரணமாக 9:3:3:1 உருவாகிறது?

A. பிரிதல்

B. குறுக்கே கலத்தல்

C. சார்பின்றி ஒதுங்குதல்

D. ஒடுங்கு தன்மை

116. பொருத்துக:

a. முன்னோர் பண்பு மீட்சி- 1. வளர்ச்சியடையாத வால் மற்றும் உடல் முழுவதும் அடர்ந்த முடி

b. எச்ச உறுப்புகள் - 2. திருவக்கரை

c. செயல்ஒத்த உறுப்புகள் - 3. பூனை மற்றும் வௌவாலின் முன்னங்கால்

d. அமைப்பு ஒத்த உறுப்புகள் - 4. வௌவாலின் இயற்கை மற்றும்

பூச்சியின் இறக்கை

e. மரப்பூங்கா- 5. முள்ளெலும்பு மற்றும் குடல்வால்

A. 5 1 2 3 4

B. 3 4 5 2 1

C. 1 5 4 3 2

D. 3 5 1 3 4

117. DNAவை வெட்டப் பயன்படும் நொதி

A. கத்தரிக்கோல்

B. ரெஸ்ட்ரிக்ஸன் எண்டோநியூக்ளியேஸ்

C. கத்தி

D. RNA நொதிகள்

118. பின்வருவனவற்றில் தவறானவற்றைத் தேர்ந்தெடு:

1. உயிரி வாயு ஒரு புதைபடிவ எரிபொருளாகும்.

2. மரம் நடுவதால் நிலத்தடி நீர்மட்டம் அதிகரிக்கும்.

3. அணு ஆற்றல் ஒரு புதுப்பிக்கத்தக்க ஆற்றலாகும்.

4. தேசியப் பூங்கா ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதியாகும்.

A. 1 மட்டும்

B. 2 (ம) 3

C. 1 (ம) 3

D. 4 மட்டும்

119. பொருத்துக:

a. நிசில் துகள்கள் - 1. முன் மூளை

b. ஹைப்போதலாமஸ் - 2. புற அமைவு நரம்பு மண்டலம்

c. சிறு மூளை - 3. சைட்டான்

d. ஸ்வான் செல்கள் - 4. பின் மூளை

A. 1 2 3 4

B. 1 3 2 4

C. 2 4 3 1

D. 3 1 4 2

120. மூளை உறைகளுள் வெளிப்புறமாகக் காணப்படும் உறையின் பெயர்

A. அரக்னாய்டு சவ்வு

B. பையா மேட்டர்

C. டியூரா மேட்டர்

D. மையலின் உறை

121. கூற்று : டயாபடிஸ் மெல்லிடஸ் இரத்த சர்க்கரை அளவை அதிகரிக்கிறது.

காரணம் : இன்சுலின் இரத்த சர்க்கரை அளவைக் குறைக்கிறது.

A. கூற்று (ம) காரணம் சரி

B. கூற்று (ம) காரணம் தவறு

C. கூற்று சரி காரணம் தவறு.

D. கூற்று தவறு காரணம் சரி

122. கீழ்கண்டவற்றில் சரியானவற்றைத் தேர்ந்தெடு:

1. ஜிப்ரல்லின்கள் தக்காளியில் கருவுறாக் கனிகளை உருவாக்குகின்றன.

2. எத்தலின் இலைகள், மலர்கள் மற்றும் கனிகள் மூப்படைவதைத் தடை செய்கின்றது.

3. கார்பஸ் லூட்டியம் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோனைச் சுரக்கிறது.

A. 1 மட்டும்

B. 2 மற்றும் 3

C. 3 மட்டும்

D. 1 மற்றும் 3

123. பொருத்துக:

a. தைராக்சின் - 1. அக்ரோமேகலி

b. இன்சுலின் - 2. டெட்டனி

c. பாராதார்மோன் - 3. எளிய காய்டர்

d. வளர்ச்சி ஹார்மோன் - 4. டயாபடிஸ் இன்சிபிடஸ்

e. ADHI - 5. டயாபடிஸ் மெல்லிடஸ்

A. 3 4 5 1 2

B. 3 5 2 1 3

C. 1 5 4 3 2

D. 3 5 1 3 4

124. LH ஐ சுரப்பது

A. அட்ரினல் சுரப்பி

B. தைராய்டு சுரப்பி

C. பிட்யூட்டரியின் முன்கதுப்பு

D. ஹபோ தலாமஸ்

125. சமீபத்தில் நமது பாரதப் பிரதமரால் முன்னெடுக்கப்பட்ட "வீர் பால் தினம்" யாரின் நினைவாக கொண்டாடப்படுகிறது.

A) பகத்சிங் நினைவாக

B) குருகோபிந்த் சிங்-ன் மகன்கள் நினைவாக

C) வீர் சவார்கர் நினைவாக

D) நாட்டுக்காக உயிர்நீத்த இந்திய தாயின் மகன்களுக்காக (இராணுவ வீரர்கள்)

126. 2022-ம் ஆண்டு கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறுவன் யார்?

A) பரத் குமார்

B) பரத் சுப்பிரமணியம்

C) ராஜ்மேஸ்ரா

D) பரத் தியாகு

127. எகிப்தில் நடைபெற்ற 2022 உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் ஆடவர் 10 மீ ஏர் பிஸ்டல் பிரிவில் தங்கம் வென்றுள்ள இந்திய வீரர் யார்?

A) சௌரவ் சௌதரி

B) ரஹி சர்னோபாத்

C) ககன் நரங்

D) விஜயகுமார்

128. சமீபத்தில் விண்வெளியில் ஏற்பட்ட சூரிய புரோட்டின் நிகழ்வுகளை பதிவு செய்துள்ள இந்திய விண்கலன் எது?

A) மங்கள்யான்

B) ஈஓ எஸ் - 04

C) சந்திராயன் - 2

D) இன்ஸ்ப யர் சாட் -1

129. 2022 பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருதினை பெறாதவர் யார்?

A) கோ. பொன்னு புதியவன்

B) லோகேஷ் குமார்

C) செ. மூர்த்தி

D) பி.லட்சுமி தேவி

130. 2022 ஐ.நா. உலக மகிழ்ச்சி அறிக்கையின்படி உலகத்தின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில் இந்தியாவின் தரநிலை என்ன?

A) 139 வது இடம்

B) 143 வது இடம்

C) 132 வது இடம்

D) 136 வது இடம்

131. குப்தர்களை பற்றிய கூற்றுகளில் தவறான வாக்கியம் எது?

A. நாணயங்களில் சந்திரகுப்தர், குமாரதேவி உருவங்கள் காணப்பட்டன

B. ஹரிசேனர் சந்திரகுப்தரின் முக்கிய அலுவலர் ஆவார்.

C. சமுத்திர குப்தரின் கல்வெட்டு அலகாபாத் அசோகர் தூண் கல்வெட்டில் காணப்படுகின்றது.

D. ஈரான் கல்வெட்டு சமுத்திரகுப்தரை பற்றி தெரிவிக்கின்றது.

132. பாமினி அரசு கீழ்க்கண்ட எந்த மாநிலங்களில் பரவி இருந்தது?

A) மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா

B) மகாராஷ்ரா மற்றும் குஜராத்

C) மகாராஷ்ரா மற்றும் தெலுங்கானா

D) மகாராஷ்ரா மற்றும் மத்தியப்பிரதேசம்

133. மாபெரும் சமஸ்கிருத அறிஞரான தண்டின் யாருடைய அவையை அலங்கரித்தார்?

A. முதலாம் நரசிம்மவர்மன்

B. இரண்டாம் நரசிம்மவர்மன்

C. இரண்டாம் நந்திவர்மன்

D. மூன்றாம் நந்திவர்மன்

134. சிவாஜியின் அஷ்டபிரதானின் சுர்நாவிஸ் என அழைக்கப்படுபவர் யார்?

A. உள்துறை அமைச்சர்

B. நிதியமைச்சர்

C. செயலர்

D. வெளியுறவுத்துறை அமைச்சர்

135. டெல்லி சுல்தான் பற்றிய கூற்றுகளுள் தவறானதைத் தேர்ந்தெடு.

1. இல்டுமிஷ் காலத்தில்தான் மங்கோலியர்கள் செங்கிஸ்கானின் தலைமையில் இந்திய எல்லைப் பகுதிகளை அச்சுறுத்தினர்.

2. குலகுகான் என்பாரிடமிருந்து "மங்கோலியர்கள் சட்லஜ் நதியைக் கடந்து படையெடுப்புக்கு வரமாட்டார்கள்" என்ற உறுதிமொழியைப் பெற்றவர் இல்டுமிஷ்

3. குத்புதீன் ஐபக் ஆக்ராவில் குவ்வத் - உல் - இஸ்லாம் மஸ்ஜித் எனும் மசூதியைக் கட்டினார்.

4. இக்தா என்பது இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியத்திற்காக கொடுக்கப்பட்ட நிலம் ஆகும்

A. 1,2 தவறு

B. 2,3 தவறு

C. 3,4 தவறு

D. 3,4 தவறு

136. விஜயநகரப் பேரரசு எத்தனை மாகாணங்களாக பிரிக்கப்பட்டிருந்தது?

A. 4 மாகாணங்கள்

B. 5 மாகாணங்கள்

C. 6 மாகாணங்கள்

D. 8 மாகாணங்கள்

137. இரவீந்தநாத் தாகூர் எதற்கு எதிர்ப்பு தெரிவித்து தனது பட்டத்தை துறந்தார்?

A) ஹோம் ரூல் லீக்

B) கிலாபத் இயக்கம்

C) ஜாலியன் வாலாபாக் படுகொலை

D) ஆகஸ்ட் அறிக்கை

138. கீழ்கண்ட கூற்றுகளில் மௌலானா அபுல்கலாம் ஆசாத் பற்றிய தவறான கூற்று எது?

1. மௌலானா அபுல்கலாம் ஆசாத் கல்கத்தாவில் பிறந்தார்.

2. இவர் "லிசான் உல் சித்திக்" என்ற பத்திரிக்கையின் பதிப்பாசிரியர் ஆவார்.

3. இவர் அல் கிலால் என்ற இதழை வெளியிட்டார்.

4. இவர் இந்திய தேசிய காங்கிரஸ்க்கு 12 மற்றும் 1940 ஆம் ஆண்டுகளில் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

A) 2, 3 சரி மற்றும் 1, 4 தவறு

B) 1, 2, 3 சரி மற்றும் 4 தவறு

(C) 1, 2, 3 மற்றும் 4 சரி

D) 2, 3,4 சரி மற்றும் 1 தவறு

139. இந்து முஸ்லீம் ஒற்றுமையின் தூதுவர் என சரோஜினியால் புகழாரம் சூட்டப்பெற்றவர் யார்?

A) மகாத்மா காந்தி

B) ஜவஹ்லால் நேரு

C) ஜின்னா

D) மோதிலால் நேரு

140. பகத்சிங்கிற்கு மரணதண்டனை விதிக்கப்பட்டதற்கான காரணம்?

A) சார்ஸ் டெகார்ட் கொல்லமுயற்சித்ததால்

B) இந்துஸ்தான் சோஷியலிசகுடியரசு அமைப்பின் தலைவராதலால்

C) சோஷியலிசமற்றும் கம்யூனிசகொள்கைகளைபரப்பியதால்

D) லாகூர் சதிவழக்கிற்காக

141. லோகமான்யாதிலகர் தன்னுடையகேசரி, மாரத்தாபத்திரிக்கையில் எழுதிய கூற்றுகளில் கீழ்கண்டவற்றுள் எது உண்மையானது?

A) கோரல்மில் தொழிலாளர்களின் வெற்றி

B) வேதாரண்யம் உப்புசத்தியாகிரகத்தின் வெற்றி

C) தண்டி உப்புசத்தியாகிரகத்தின் வெற்றி

D) வ.உ.சி சுதேசி கப்பலின் வெற்றி

142. கீழ்கண்ட எந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டின் தலைவராக மகாத்மா காந்தி அவர்கள் செயல்பட்டார்?

A) அமராவதி

B) பெல்காம்

C) நாக்பூர்

D) கராச்சி

143. கீழே கொடுக்கப்பட்டவைகளில் எவை கடலடி படிவுகள் ஆகும்?

i) மணல்

ii) உப்புகள்

iii) கடல் பொருட்கள்

iv) களிமண் (ம) சேறு

A. i,ii,iii சரி

B. i,ii,iv சரி

C. ii,iii சரி

D. அனைத்தும் சரி

144. பின்வருவனவற்றுள் புவியின் உள்ளமைப்பை பற்றிய தகவல்களை அறிய உதவும் நேரடி ஆதாரம் எது?

A. நிலநடுக்க அலைகள்

B. புவிஈர்ப்பு விசைகள்

C. எரிமலைகள்

D. புவி காந்தபுலம்

145. பொருத்துக:

1. மன்னார் வளைகுடா- மலை உயிரிய மிகுவளம்

2. நீலகிரி - உத்திர பிரதேசம்

3. சுந்தர வனக்காடுகள்- மேற்கு வங்கம்

4. நந்தா தேவி- உயிரியல் சொர்க்கம்

A. 3 4 2 1

B. 4 1 3 2

C. 4 3 1 2

D. 1 2 3 4

146. மாநிலங்களை இரும்பு எஃகு உற்பத்தியின் அடிப்படையில் இறங்கு வரிசையில் சரியான வரிசை எது?

A. கர்நாடகா, ஒடிசா, சத்திஸ்கர், கோவா

B. கோவா, கர்நாடகா, ஒடிசா, சத்திஸ்கர்

C. சத்திஸ்கர், ஒடிசா, கர்நாடகா, கோவா

D. ஒடிசா, சத்திஸ்கர், கர்நாடகா, கோவா

147. கீழ்க்க ண்ட கூற்றுகளில் சரியானது எது?

i) இந்தியாவின் ஆண்டு சராசரி மழையளவு 118 செ.மீ

ii) இந்தியா தென்மேற்கு பருவக்காற்று மூலம் அதிக மழைப்பொழிவைப் பெறுகிறது.

iii) தமிழ்நாடு வடகிழக்கு பருவக்காற்று மூலம் அதிக மழைப்பொழிவைப் பெறுகின்றன.

iv) உலகில் மிக அதிக மழை பெறும் பகுதி மௌசின்ராம்.

A. அனைத்தும் சரி

B. i,ii,iv சரி

C. i,ii,iv சரி

D. i,iv சரி

148. இந்தியாவில் காலநிலையைப் பாதிக்கும் காரணிகளில் அல்லாதது எது?

A. அட்ச பரவல்

B. மண்

C. கடலிலிருந்து அமைந்துள்ள தூரம்

D. உயரம்

149. அரசுக் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள் எந்த அரசியலமைப்பிலிருந்து எடுக்கப்பட்டது?

(A) அமெரிக்கா

(B) ரஷ்யா

(C) பிரிட்டன்

(D) அயர்லாந்து

150. பல்வந்தத்ராய் மேத்தா குழுவில் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டது

(A) மூன்று அடுக்கு முறை

(B) ஓரடுக்கு முறை

(C) நான்கு அடுக்கு முறை

(D) இரண்டு அடுக்கு முறை

151. இந்திய தலைமைத் தணிக்கையாளரை எந்த விதியின் படி குடியரசு தலைவர் நியமனம் செய்கிறார்?

(A) விதி 162

(B) விதி 148

(C) விதி 153

(D) விதி 174

152. குடியரசுத் துணைத் தலைவர் பதவி பற்றி எந்த அரசியலமைப்பு சட்டப்பிரிவு கூறுகிறது?

(A) விதி 53

(B) விதி 356

(C) விதி 360

(D) விதி 63

153. லோக் ஆயுக்தா முதன் முதலில் எந்த மாநிலத்தில் அமைக்கப்பட்டது?

(A) குஜராத்

(B) மகாராஷ்ட்ரா

(C) ராஜஸ்தான்

(D) கேரளா

154. இந்திய அரசியலமைப்பு விதி 51 (A) எதை பற்றி குறிப்பிடுகிறது?

(A) அடிப்படை உரிமைகள்

(B) அடிப்படை கடமைகள்

(C) அரசு வழிகாட்டும் நெறிமுறைக் கோட்பாடு

(D) அரசியலமைப்பு சட்ட திருத்தம்

155. இந்திய ரூபாய் குறியீட்டினை வடிவமைத்தவர் யார்?

(A) உதயகுமார்

(B) அமர்த்தியா சென்

(C) அபிஜித் பானர்ஜி

(D) இவற்றில் எவரும் இல்லை

156. 'செல்வ இலக்கணம்' பற்றிக் கூறியவர்.

(A) கார்ல் மார்க்ஸ்

(B) ஆடம் ஸ்மித்

(C) மால்தஸ்

(D) ஜே.எம்.கீன்ஸ்

157. சரியாக இல்லாததைத் ஒன்றைத் தேர்க

1. முதன்மைத்துறை- விவசாயத் துறை

2. இரண்டாம் துறை - சார்புத் துறை

3. மூன்றாம் துறை - சேவைத்துறை

(A) 1 மட்டும்

(B) 2 மட்டும்

(C) 1 மற்றும் 3 மட்டும்

(D) 3 மட்டும்

158. பொருத்துக:

(a) மின்னணு பணமாற்றம் - கி.பி. 2008

(b) NFC - கி.பி. 1860

(c) அலைபேசி - வங்கிச் செயல்பாடு - கி.பி. 1999

(d) கடன் அட்டை - கி.பி. 1946

(A) 2 1 3 4

(B) 1 2 3 4

(C) 3 1 2 4

(D) 4 3 2 1

159. கூற்று A: 1991 முதல் புதிய பொருளாதார சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டதால் நமது திட்டமிடலில் நல்ல தரமான மாற்றங்கள் ஏற்பட்டன.

காரணம் R : இந்திய திட்டமிடலின் மையநோக்கம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது

A) A மற்றும் R சரி

B) A தவறு R சரி

C) A மற்றும் R தவறு

D) A சரி R தவறு

160. சுழல் திட்டம் என்பது

A) ஒவ்வொரு ஆண்டும் இலக்கு மாறாது

B) ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கீடு மாறும்

C) ஒவ்வொரு ஆண்டும் இலக்கும், நிதி ஒதுக்கீடு மாறும்

D) ஒவ்வொரு ஆண்டும் இலக்கு மாறும்

161. அரேபியாவிலிருந்தும், கிரேக்கத்திலிருந்தும் வணிகப் பொருள்களை ஏற்றிக் கொண்டு வந்த எண்ணற்ற நாவாய்கள் முசிறியில் செறிந்து கிடந்தனவென்று கூறும் நூல்?

A. பெரிபுளூஸ்

B. பூகோள நூல்

C. உயிரிய நூல்

D. இவை அனைத்தும்

162. பொருத்துக:

தமிழ்சங்கம்	வளர்த்தவர்கள்
A. முதற்சங்கம்	1. வேண்டாச்செழியன் முதல் முடத்திருமாறன் வரை
B. இடைச்சங்கம்	2. காய்சினவழுதி முதல் கடுங்கோன் வரை
C. கடைச்சங்கம்	3. முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி வரை

A. 2 1 3

B. 3 2 1

C. 1 2 3

D. 2 3 1

163. மேற்கு தொடர்ச்சி மலைகளும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் தமிழகத்தின் ..... மாவட்டத்தில் ஒன்றாக இணைகின்றன?

A. தர்மபுரி

B. நீலகிரி

C. திண்டுக்கல்

D. திருநெல்வேலி

164. "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகத்து " என்ற அடிகள் இடம் பெற்றுள்ள நூல்?

A. சிலப்பதிகாரம்

B. நன்னூல்

C. தொல்காப்பியம்

D. அகத்தியம்

165. இவற்றுள் வ.உ.சிதம்பரம் அவர்களால் எழுதப்படாத ஒன்று ?

A. மெய்யறிவு

B. மெய்யறம்

C. பாடல் திரட்டு

D. சூரியோதயம்

166. தீரன் சின்னமலை புரிந்த போர்களில் சரியாக பொருந்தியுள்ளது எது?

A. காவிரிக் கரையில் நடைபெற்ற போர் - 1801

B. ஓடநிலையில் நடந்த போர் - 1802

C. அரச்சலூர் போர் - 1804

D. இவை அனைத்தும்

167. கூற்று (1) : சின்ன மருது வேலு நாச்சியாரின் ஆலோசகராகவும் பெரிய மருது படைத் தளபதியாகவும் நியமிக்கப்பட்டனர்

கூற்று (2): வீரபாண்டிய கட்டபொம்மன் தனது 30 ஆம் வயதில் பாஞ்சாலங்குறிச்சி பாளையத்துக்குப் பொறுப்பேற்றார்

A. கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

B. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

C. இரண்டும் சரி

D. இரண்டும் தவறு

168. கூற்று (1): ஐரோப்பிய மொழிகள் தவிர்த்து அச்சில் ஏறிய மொழிகளில் முதல் மொழி தமிழ் மொழியாகும்

கூற்று (2): 1578 இல் தம்பிரான் வணக்கம் எனும் தமிழ் புத்தகம் கோவாவில் வெளியிடப்பட்டது

A. கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

B. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

C. இரண்டும் சரி

D. இரண்டும் தவறு

169. கூற்று(1): 1756 இலிருந்து 1765 வரைக்கும் திருவிதாங்கூரிலிருந்து கிடைத்த சீரான ஆதரவுடன், புலித்தேவர் தலைமையிலான பாளையக்காரர்கள் ஆற்காடு நவாபுக்கு எதிரான கிளர்ச்சியில் நீடித்து நின்றார்கள்.

கூற்று(2): வேலுநாச்சியார் இராமநாதபுரம் அரசரான செல்லமுத்து சேதுபதியின் மகள் ஆவார், அவர் சிவகங்கை அரசரான முத்துவடுகர் பெரிய உடையாரை மணந்தார்

A. கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

B. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

C. இரண்டும் சரி

D. இரண்டும் தவறு

170. சரியான கூற்று எது?

1. 1980 இல் மதுரையில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு எம்.ஜி.ஆர் ஆட்சி காலத்தில் நடைபெற்றது

2. 1968 இல் சென்னையில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு அண்ணா ஆட்சி காலத்தில் நடைபெற்றது

3. 1995 இல் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தஞ்சையில் நடைபெற்றது

A. 1, 2, 3 சரி

B. 2, 3 சரி

C. 1, 3 சரி

D. 1, 2 சரி

171. சிவகாசி குட்டி ஜப்பான் என்று யாரால் அழைக்கப்பட்டது?

A. அண்ணா

B. சிவசுப்பிரமணியன்

C. நேரு

D. எம்.ஜி.ஆர்

172. கூற்று (1): ஈரோடு மாவட்டம் தென்னிந்தியாவின் மொத்த மற்றும் சில்லறை ஆயத்த ஆடைகளுக்கான முக்கிய ஜவுளி சந்தையாக உள்ளது

கூற்று (2): தமிழகத்தின் நுழைவுவாயில் தூத்துக்குடி ஆகும்

A. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B. இரண்டும் சரி

C. கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

D. இரண்டும் தவறு

173. பொருத்துக:

A. நெய்வேலி லிக்னைட் கழகம்1. 1961

B. பெரம்பூர் இரயில்பெட்டி தொழிற்சாலை 2. 1955

C. இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் 3. 1956

D. கனரக வாகனத் தொழிற்சாலை ஆவடி4. 1960

A. 3 2 4 1

B. 3 2 1 4

C. 2 3 4 1

D. 3 1 4 2

174. ஆசியாவிலேயே மிகப்பெரிய வெளியூர் பேருந்து நிலையம் சென்னை கோயம்பேட்டில் எப்போது அமைக்கப்பட்டது?

A. 2000

B. 2001

C . 2003

D. 2005

175. பொருத்துக:

A. முதியோர் ஓய்வூதியத்திட்டம் (பொது திட்டம்) - 1. 1962

B. உடல் ஊனமுற்றோருக்கான ஓய்வூதியத்திட்டம் - 2. 1974

C. ஆதரவற்ற விதவைகளுக்கான ஓய்வூதியம் - 3. 1975

D. ஆதரவற்ற விவசாய தொழிலாளர்கள் ஓய்வூதியம் - 4. 1981

E. கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியதிட்டம்- 5. 1986

A. 1 2 3 4 5

B. 4 5 3 1 2

C. 5 4 3 2 1

D. 1 2 5 3 4

176. 9 சிலந்திகள் 9 வலையை 9 நாட்களில் பின்னுகிறது எனில் 1 சிலந்தி 1 வலையை எத்தனை நாட்களில் பின்னும்?

A. 1 நாள்

B. 9 நாட்கள்

C. 18 நாட்கள்

D. 18 நாட்கள்

177. ஒரு நேர்வட்ட உருளையின் அடிப்பரப்பு 30 செ.மீ.^{2} மற்றும் அதன் உயரம் 6 செ.மீ. எனில் அதன் கன அளவு யாது?

A. 60 க.அ

B. 90 க.அ

C. 120 க.அ

D. 180 க.அ

178. + என்பது x , - என்பது ÷ , x என்பது - மற்றும் ÷ என்பது + குறித்தால் 25 + 32 - 4 x 12 ÷ 3 என்பது

A. 137

B. -125

C. 191

D. -197

179. “NGCH” என்ற வார்த்தை “LEAF” என்ற வார்த்தையை குறித்தால், “MPQY” என்ற சொற்றொடர் குறிக்கும் சொற்றொடர்

A. JMNV

B. KNOW

C. LOPX

D. KOWN

180. கீழ்க்காணும் விகிதங்களில் மிகப் பெரியது எது?

4:5, 8:15, 3:10, 1:2

A. 4 : 5

B. 8 : 5

C. 3 : 10

D. 1 : 2

181. ஒரு எண் மற்றும் அதன் தலை கீழி யின் கூடுதல் $\frac{65}{8}$ எனில் அந்த எண் யாது?

A. 6

B. 8

C. 9

D. 65

182. பின்வரும் தொடர் வரிசையில் விடுபட்ட என்னை காண்க எண்ணைக் காண்க

2^2, 3^2, 5^2, 7^2, ...,13^2

A. 9^2

B. 10^2

C. 11^2

D. 84

183. A ஒரு வேலையை 12 நாட்களில் முடிப்பார். அதே வேலையை B, 20 நாட்களில் முடிப்பார். A மற்றும் B சேர்ந்து 3 நாட்கள்

வேலை செய்த பின் A சென்று விட்டார். மீதி வேலையை B முடிக்க தேவைப்படும் நாட்கள்

A. 9

B. 11

C. 12

D. 13

184. சமமான ஆரம் மற்றும் உயரம் உடைய கூம்பு, கோளம் உருளை ஆகியவற்றின் கன அளவுகளின் விகிதம்

A. 1:4:3

B. 1:3:4

C. 4:3:1

D. 3:4:1

185. மூன்று பூஜ்ஜியமற்ற எண்கள் a,b,c என்பன ஒரு கூட்டுத் தொடர் வரிசையில் இருந்தால் நிபந்தனை?

A. 2b = a + c

B. 2a = b + c

C. 2c = a+ b

D. $a = \frac{b + c}{2}$

186. 9, 6, 7, 8, 5 மற்றும் x ஆகியவற்றின் கூட்டு சராசரி 8 எனில் x-இன் மதிப்பு.

A. 48

B. 13

C. 15

D. 12

187. ஒரு திடக் கோளத்தின் வளைபரப்பு 30 செ.மீ^{2} அதனை இரு அரைக்கோளங்களாகப் பிரித்தால் ஒரு அரைக்கோளத்தின் மொத்த பரப்பு என்ன?

A. 9 செ.மீ^{2}

B. 12 செ.மீ^{2}

C. 18 செ.மீ^{2}

D. 27 செ.மீ^{2}

188. 4,7,10,.....118 என்ற முடிவுறு கூட்டத்தொடரில் நடு உறுப்பு

A. 55

B. 58

C. 61

D. 64

189. k- ன் மதிப்பு காண்க

$1^3 + 2^3 + 3^3 + ...+ k^3 = 44100$

A. 20

B. 21

C. 22

D. 23

190. மூன்று ஆண்டுகளில் 6% தனிவட்டி வீதம் மொத்த தொகை ரூ.11800 அளிக்கும் அசலை காண்க

A. ரூ.8000

B. ரூ.9000

C. ரூ.10000

D. ரூ.9500

191. $(x^2y + xy^2)$, $(x^2 + xy)$ஆகியவற்றின் மீ.பொ.வ. காண்க

A. $x + y$

B. xy

C. $x(x+y)$

D. $x^2 + y^2$

192. கடனாக வழங்கப்பட்ட அசல் ரூ.48,000க்கு 2 ஆண்டுகள் 3 மாதக்காலத்திற்குப் பின் தனிவட்டி மூலம் பெறப்பட்ட மொத்தத் தொகை ரூ.55,560 ஆக இருந்தது எனில், வட்டி வீதத்தைக் காண்க

A. 7%

B. 8%

C. 9%

D. 10%

193. 32 செ.மீ. ஆரம் கொண்ட உலோககோளத்தை உருக்கி 2 செ.மீ. ஆரம் கொண்ட சிறிய கோளமாக மாற்றினால் எத்தனை கோளங்கள் கிடைக்கும்?

A. 4096

B. 512

C. 1024

D. 2048

194. ஒரு தேர்வில் 480 மாணவர்களில் 85% பெண்கள் மற்றும் 70% ஆண்கள் தேர்ச்சி பெற்றனர். மொத்த தேர்ச்சி சதவீதம் 75% சதவீதம் எனில் தேர்வில் எத்தனை ஆண்கள் பங்கு பெற்றனர்?

A. 370

B. 360

C. 340

D. 320

195. ரூ.1600- ஐ A மற்றும் B க்கு 3:5 என்ற விகிதத்தில் பிரித்தால் B-ன் பங்கு

A. ரூ.200

B. ரூ.480

C. ரூ.800

D. ரூ.1000

196. இரு கூம்புகளின் கன அளவுகளின் விகிதம் 2:3 மற்றும் அவற்றின் அடிப்பக்க ஆரங்களின் விகிதம் 1:2 ஆகவும் இருந்தால் அவற்றின் உயரங்களின் விகிதம்

A. 3:8

B. 2:1

C. 4:1

D. 1:4

197. ஒரு வட்டத்தின் பரப்பளவிற்கும் அதன் அரை வட்டத்தின் பரப்பளவிற்கும் இடையேயுள்ள விகிதம்

A. 1:2

B. 2:1

C. 4:1

D. 1:4

198. மீ.பொ.ம காண்க:

$(2^3 \times 3 \times 5^2 \times 7)$, $(2^4 \times 3^2 \times 5 \times 7^2 \times 11)$ மற்றும் $(2 \times 3^3 \times 5^4)$

A. $2^4 \times 3^3 \times 5^4$

B. $2 \times 3 \times 7 \times 5 \times 11$

C. $2^4 \times 3^3 \times 5^4 \times 7^2 \times 11$

D. $2^4 \times 3^4 \times 5^4 \times 7$

199. இரு அடுத்தடுத்த பகா எண்களின் மீ.சி.ம அவற்றின் எதற்கு சமம்?

A. இரு எண்களின் கூடுதல்

B. இரு எண்களின் பெருக்கற்பலன்

C. இரு எண்களுக்கான வித்தியாசம்

D. இரு எண்களின் மீ.பெ.வ

200. 8,12,15ஆல் மீதியின்றி வகுபடும் மிகப்பெரிய நான்கு இலக்க எண்

A. 9930

B. 9960

C. 9920

D. 9980